

# பரலோக பொக்கிஷங்கள்

*உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!*

## பொறுத்திருங்கள், நிச்சயமாய் பதிலளிப்பார்!

'ஒரு விதவை' தனக்கு யாரோ 'எதிராளியாய்' வந்த காரியத்தில் பலமுறை நியாயம் கேட்டும் அந்த நியாயாதிபதி, அவள் விண்ணப்பத்தை கேட்கவில்லை! ஆனால் அவளோ, சோர்ந்துபோகாமல் 'அடிக்கடி' அவனிடம் விண்ணப்பித்தாள்! "இவள் என்னிடம் அடிக்கடி வந்து அலட்டுகிறாளே" என தனக்குள் கூறி, அவளுடைய நியாயத்தை விசாரித்தான்! (லூக்.18:3-6). இதை இயேசு உவமையாய் குறிப்பிட்டு "தேவனும் அப்படியே தம்முடையவர்களின் விஷயத்தில் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து, அவர்களை நிச்சயமாய் விசாரித்து நியாயம் செய்வார்!" என கூறினார்!

ஆம், சோர்ந்து போகாமல் ஜெபத்தில் காத்திருப்பதற்கு "விசுவாசம்" வேண்டும்! அந்த விசுவாசத்தை நம்மில் காண்பதற்கே ஆண்டவர் தாமதிக்கிறார்! ஆனால், ஆண்டவர் 'பதில்' கொண்டுவந்த நேரத்தில், அவர்கள் 'சோர்ந்து' ஜெபத்தை நிறுத்தி விட்டார்கள்! அதாவது, ஆண்டவர் அவர்களிடம் நீடிய பொறுமையான 'விசுவாசத்தை' காணமுடியாமல் வருந்தி, ஏமாற்றத்துடன் திரும்புகிறார்! (லூக்.18:7,8). 'விசுவாசத்துடன்' பொறுத்திருங்கள், நிச்சயமாய் பதிலளிப்பார்! *-tr*

பெட்டகம் 38 | ஜனவரி 2022 | பரல்கள் 01



# ஆச்சரியமாய் நம்மை காக்கும் தேவன்!

நம் 'நகம்' எவ்வாறு உயிரற்ற செதிலோ, அதுபோலவேதான் நம் முடியும் உயிரற்ற செதிலாகும்! ஆகவேதான் முடியை வெட்டினால் இரத்தம் வருவதில்லை!! பார்த்தீர்களா.... உங்கள் உடம்பிலுள்ள 'உயிரற்ற' ஒரு முடியை 'உயிருள்ள' ஒரு அடைக்கலான் குருவிக்குச் சமமாய் அல்லவா இயேசு கூறிவிட்டார்!? (மத்.10:29-31). ஆகவே, உங்கள் உயிரற்ற 1-இலட்சம் முடிக்கு, உயிருள்ள 1-இலட்சம் குருவிகள் மதிப்பு என்றால், உங்கள் 'உயிருள்ள' கண், மூக்கு, கை, கால், இருதயம், கிட்னி, ஈரல்.... இவைகளுக்கொப்பாய் எத்தனை அடைக்கலான் குருவிகள் ஒப்பாகும்? கணக்கிலடங்கா..... கோடிகோடி குருவிகள் இருக்குமே! அப்படியானால், நமக்கு இணையாக எத்தனை அடைக்கலான் குருவிகள்? "அநேகம் அடைக்கலான் குருவிகள்!" விற்கப்பட்ட 'இரண்டு அடைக்கலான் குருவிகளில்' ஒன்றாகிலும் பிதாவின் அனுமதியில்லாமல், தரையிலே விழாது என நம் குரு உரைத்திருக்க.... தன் முழுமையையும் குருவின் பாதம் தத்தம் செய்துவிட்ட உத்தம சீஷன், தன் சரீரத்திற்கு பயப்படுவது நியாயம்தானா? வியப்பூட்டும் கணக்கை, நம் குரு கூறிவிட்டு.... "ஆதலால், பயப்படாதிருங்கள்" என கூறிய இனிய தொனி நம் நெஞ்சம் நிறைப்பதாக! நம்மை ஆச்சரியமாய் காக்கும் தேவனை, இந்த ஆண்டு முழுவதும் விசுவாசிப்போமாக!

*-Ed*


## 2022 'பரலோக பொக்கிஷங்கள்'

வருட சந்தா ரூ.150/- தயவுசெய்து உடன் M.O செய்து அல்லது ஆன்லைன் மூலம் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு ஜனவரி 20-ம் தேதிக்குள் அனுப்பி புதுப்பித்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில் 3பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.125/- அயல்நாடு ஒரு பிரதி ரூ.900/- அனுப்ப வேண்டும். புதுப்பித்துக் கொள்பவர்கள், தங்கள் சந்தா எண்ணை குறிப்பிடவும், புதிதாய் வாங்குபவர்கள் **'புதிது'** என்று குறிப்பிடவும். நன்றி!

**ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்! சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!**

வங்கி கணக்கு: **MADURAI CHRISTIAN FELLOWSHIP,** Indian Bank - Koodal Nagar Branch
**A/c no: 502087685** Ifsc code: IDIB000K150
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)



கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள்
207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India
Cell 98430 - 49935 Ph (O) 0452 - 2662306
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com, tamil.cfcindia.com
You Tube : paralogapokkishangal, CFCMadurai

## ‘தைரியம் இழக்காமல்’ மேல் நோக்கிப் பாருங்கள்!

*“அவர்கள் திரும்பிப் பார்த்தார்கள்! அப்பொழுது கர்த்தருடைய மகிமை மேகத்தின் மேல் காணப்பட்டது” (யாத்.16:10). நீங்கள் மேகத்தை காணும்போது இரண்டு காட்சி உண்டு. முதல் காட்சி என்னவென்றால், “மேகத்தின் விளிம்பில்” காணப்படும் ‘வெள்ளி கயிற்றுக்கு ஒப்பான பிரகாசம்!’. மற்றொரு காட்சி, மேகத்தின் நடுவாக தோன்றும் ‘சாம்பல் நிற கருமை!’. நம் கண்கள் பதித்திருக்க வேண்டிய காட்சியெல்லாம் ‘வெள்ளி கயிறு போல்’ பிரகாசிக்கும் மேகத்தின் விளிம்பு மாத்திரமே. அடுத்த முறை மேகம் தோன்றும் போதெல்லாம், பிரகாசமான வெள்ளிக் கயிற்று ஓரத்தை மாத்திரமே பார்த்து ரசியுங்கள்! நான் உங்களுக்குப் புத்திசொல்ல விரும்புவதெல்லாம், மேகத்தின் காரிருள் பகுதியைப் பார்ப்பதற்கு உங்கள் கண்களுக்கு இடம் தராதிருங்கள்.*

**உங்களுக்கு கூற முயற்சிக்கும் ஓர் சத்தியம் இதுதான்: ‘உங்களை அதைரியப்படுத்தும் காரிருள்’ எவ்வளவு தீவிரமாயிருந்தாலும், அந்த கருமையான ‘அதைரியத்திற்கு’ உங்கள் பார்வை செல்லாதிருக்கக்கடவது!**

*உண்மைதான், அதைரியமடைந்த ஓர் ஆத்துமா, யாரும் உதவி செய்திட முடியாத நிற்கதியில் தள்ளப்படுகிறது. இந்த அதைரிய நிலையில் நீங்கள் நின்று கொண்டு, பிசாசின் தந்திரங்களை உங்களால் எதிர்த்து நிற்க முடியாது! ஜெபத்தில் போராடி பெற்றிடும் ஜெயத்தை அடையவும் முடியாது! ஆகவேதான், நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் ‘அதைரியத்தின் அறிகுறி’ உங்கள் கண்ணில் பட்டவுடனே, பயங்கர விஷம் நிறைந்த விரியன் பாம்பைக் கண்டதுபோல் ஓடிப் போய் விடுங்கள். கொஞ்சம் தடுமாறி, மெல்ல திரும்பி ஓடலாம் என நீங்கள் எண்ணினால் கூட ‘தோல்வியடைந்து’ மண்ணில் வீழ்ச்சியடைவீர்கள்.*

**இந்த நேரத்தில், உங்களுக்குத் தேவையான தேவனுடைய வாக்குதத்தத்தை ஆர்வமுடன் தேடி கண்டுபிடித்து “இந்த வாக்குதத்தம் என்னுடையது!” என உரத்த சத்தமாய் கூறுங்கள்.**

*இதையும் மீறி, அதைரியமும் சந்தேகமும் உங்களை ஆட்கொண்டால், உங்கள் முழு இருதயத்தையும் தேவனிடத்தில்*

ஊற்றி "ஓ கர்த்தாவே, என்னை அழிக்க வகை தேடி மனச்சோர்வடையச் செய்யும் அதைரியத்தைக் கொண்டு வரும் **சத்துருவாகிய சாத்தானை நீர் கடிந்து கொள்ள** தயவுடன் கெஞ்சுகிறேன்" என வேண்டுதல் செய்யுங்கள்! இவ்வாறு, உங்களிடத்தில் அவநம்பிக்கையாகிய அதைரியத்தின் அறிகுறி கண்ட மாத்திரத்தில், நீங்கள் அதை முழு இருதயமாய் புறக்கணித்து திரும்பும் போதெல்லாம்..... **ஆசீர்வதிக்கப்பட்ட பரிசுத்த ஆவியானவர்** உங்கள் விசுவாசத்தை உற்சாகப்படுத்தி, தம்முடைய திவ்விய பெலனை உங்கள் ஆத்துமாவில் ஊற்றுவார்! ஆம், அவிசுவாசத்தோடு யாதொரு சமரசமும் செய்யாமல், உங்களைத் தாக்கும் அவநம்பிக்கையாகிய மனச்சோர்வின் 'சிறு முளையைக் கண்ட மாத்திரத்தில்' அதைத் தீவிரமாய் கிள்ளி எறிந்து விடுங்கள். அதன்பின்பு ஏற்படும் கோலாகலமான விளைவு, நீங்களே அறியாமல் உங்களுக்கு சம்பவித்து விடும். ஆ, உங்களைத் தாக்க வந்த காரிருள் படுபாதாளத்தில் வீழ்ந்து மறைந்து போவதை நீங்கள் காண்பீர்கள்!

இவ்வாறு, **தொடர்ச்சியாய்** உங்கள் கண்கள் தேவனுடைய பலத்த அரணான வல்லமையை மாத்திரமே காணக்கடவது! இருளின் அதிகாரம் உங்களைத் தாக்க வரும்போதெல்லாம், அதற்கு விரோதமான எதிர்ப்பை நீங்கள் தொடர்ந்து செய்வீர்களென்றால், பிற்காலத்தில் தோன்றும் மன உளைச்சல், மனச்சோர்வு, அதைரியம் ஆகிய இந்த சத்துருக்களை வெகு துச்சமாய் எண்ணும் இடத்தை கண்டடைவீர்கள்.

**தேவத்துவத்தின் அற்புதமான சகல வல்லமையும் 'பெலஹீனமான ஓர் விசுவாசியை' தாங்கும்படியே அருளப்பட்டிருக்கிறது. இந்த விசுவாசி யார்? கிறிஸ்துவின் நாமத்தில் தேவனுடைய உதவிக்காகவும், வழி நடத்துதலுக்காவும் 'குழந்தையின் விசுவாசத்தோடு' தேவனிடத்தில் திரும்பி, அவரையே சார்ந்து கொள்ளும் ஓர் உத்தம விசுவாசி!**

ஓர் சமயத்தில், **'மேகத்து கழுகு'** என அழைக்கப்படும், மிகப்பெரிய கழுகு, வேட்டை துப்பாக்கியால் தாக்கப்பட்டு, தரையில் விழுந்து கிடந்ததைக் கண்டேன். அந்த கழுகின் கண்கள் 'ஓர் அழகிய ஒளி வட்டமாய்' இன்னமும் மின்னிக்கொண்டிருந்ததையும் கண்டேன். அந்தக் கழுகு, மிகுந்த வலியோடு தன் தலையை உயர்த்தி வானத்தைச் சுற்றிப் பார்த்து, எதையோ தேடிக்கொண்டிருந்தது. மேகத்தை சுற்றிப் பார்த்த மகிழ்ச்சியில், தன் ஆச்சரியமான செட்டைகளை மீண்டும் அடித்து பறக்க முயற்சித்து தோல்வியுற்றது! அந்த அழகு வானம்தான், அந்த கழுகின் இருதயத்திற்கு மகிழ்ச்சியான அதன் வீடு! அதுவே, கழுகின் உன்னத வாசஸ்தலம்! 'அந்த வானத்தை' பயன்படுத்தி, உன்னத பெலன் கொண்டு, ஆயிரம் ஆயிரமான தடவைகள் சிறகடித்துப்

*பறந்து மகிழ்ந்திருக்கிறது. அந்த உன்னத உயரத்தில் மின்னலோடு விளையாடியிருக்கிறது! புயல் வேக காற்றை மிஞ்சி, பந்தய ஓட்டம் செய்திருக்கிறது! ஆனால் இப்போதோ அந்த உன்னத வீட்டை விட்டு தூரமாய், அந்த வலிமையான கழுகு, தரையின் மண்ணில் கொஞ்சம் கொஞ்சமாய் மரித்துக் கொண்டிருக்கிறது. அது ஏன்?*

**'அது, தன் நிலை மறந்து' ஒரே ஒருமுறை பூமியை நோக்கி தாழ பறந்ததுதான்! தாழ இறங்கி வந்தது அதனுடைய வீடு அல்லவே! நம்முடைய ஆத்துமா, இந்த கழுகைப்போலவே இருக்கிறது! நம் ஆத்துமா, வானத்தின் உயர்ந்த பார்வையை தாழ்த்தியிருக்கக் கூடாது.**

*அதற்கு மாறாக, எந்த நிலையிலும் விசுவாசத்தை இழந்திடாதிருக்க வேண்டும்! நம் நம்பிக்கையை பத்திரப்படுத்தியிருக்க வேண்டும்! தைரியத்தை விடாப்பிடியாய் கொண்டிருக்க வேண்டும்! இவ்வாறாக, கிறிஸ்துவை நாம் உறுதியாய் பற்றியிருக்க வேண்டும்! வாழ்க்கையின் இந்த உக்கிரமான போர்களத்தில், அதைரியம் நம்மை பற்றிக்கொள்ள துரத்தும் வேளையில், விழிப்புடன் அதை ஜெயிக்கக்கடவோம்! நம்முடைய தைரியம் தரையில் விழுந்து மிதிக்கப்பட ஒருபோதும் அனுமதித்து விடக்கூடாது! உங்கள் பார்வை, மீண்டுமாய் திரும்பி மேல்நோக்கியே இருக்கக்கடவது! ஆமென்.*

*- Mrs.சார்லஸ் கஃவ்மென்*

**PS:** ஆங்கில Streams in the Desert - *தினசரி தியானத்திலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது. தமிழில்* **'பாலைவன நீரோடை'** *தினசரி தியானப்புத்தகம் எனது 52-ஆண்டு கிறிஸ்தவ ஜீவியத்தில் மிகுந்த பக்தி விருத்தியளிப்பதாய் உள்ளது! இதை ஆக்கம் செய்து அளித்த* Mrs.**சார்லஸ் கஃவ்மென்** *அவர்களுக்கு மிக்க நன்றி! உங்கள் தினசரி தியான மேஜையை, இப்புத்தகம் அலங்கரிப்பதாக! எளிய தமிழில், அனைவரும் நன்கு புரிந்து வாசிக்கவே, ஆங்கில தியானப்புத்தகத்திலிருந்து மொழிபெயர்த்து வழங்குகிறோம்.*

*- ஆசிரியர்*

---

## 'நாளைய தினம்' நமக்கு அச்சமில்லை!

*ஒவ்வொரு புதிய வருடமும் 'அறியப்படாத கடல்போல்' இனி என்ன நடக்கும்? என எச்சரிக்கும் கால அட்டவணை இல்லாததாகவே இருக்கிறது. இந்த புதிய சமுத்திரத்தில், எந்த கப்பலும் இதற்கு முன் சென்றதில்லை. எந்த விஞ்ஞான அறிவாளிகளும் 'எவ்வித அசம்பாவிதத்தை சந்திக்கப்போகிறோம்?' என கூறிடவும் இயலாது! அல்லது தங்களைத் தாக்கும் கொடிய புயல் 'எப்போது வீசிடும்?' என்றும் அவர்களால் கணித்திட இயலாது!*

**இந்த உலகம் எதிர்நோக்கியிருக்கும் நிலைமை மிகுந்த காரிருளாகவே**

**இருக்கிறது. இந்த உலகத்தில் உள்ள ஒருவர் கூட 'நல்லது நடக்கும்' என்ற எண்ணத்தை நிலைநிறுத்திப் பார்க்க முடியவில்லை!**

*உலகத்திலுள்ள தத்துவ மேதைகள் 'சமாதானத்தைப் பிரசங்கிப்பதிலிருந்து' ஓய்ந்து போய்விட்டார்கள். ஆகிலும், சமாதானத்தை அடைவது சாத்தியமில்லாதிருந்தும், அந்த சமாதானத்தை ஓர் தொய்ந்துபோன இலட்சியமாய் முன்வைத்து போராடி தவிக்கிறார்கள். இன்றுள்ள தலைசிறந்த விஞ்ஞானிகள் "உலக அழிவிற்குரிய ஆயுதங்களைத் தயாரிப்பதற்கே" தங்கள் மூளை அறிவை பயன்படுத்துகிறார்கள். பச்சை மரமாகிய இந்த நாட்களிலேயே அழிவிற்குரிய காரியங்களை தேடினால், வெகு துரிதமாய் பட்டை மரமாய் மாறப்போகும் காலத்தில் அவர்கள் எத்தனை பெரிய அழிவை தேட வேண்டியதாயிருக்கும்?*

*அன்று பார்வோன் தன்னுடைய தேசத்தில் பிரச்சனைகளை சந்தித்தபோது* **யோசேப்பை வரவழைத்தான்!** *நேபுகாத்நேச்சார் மன சஞ்சலமடைந்தபோது,* **தானியேலை வரவழைத்தான்!** *தங்கள் மனதில் பிரகாசம் கொண்டிருந்த இந்த தேவ மனிதர்கள், எல்லா சூழ்நிலையின் மையத்தையும் அறிந்திருந்தார்கள். ஆகவேதான், எதிர்காலத்தில் சம்பவிக்க கூடியவைகளை அவர்கள் முன்அறிவித்து, அதிலிருந்து மீளும் பாதுகாப்பின் வழியை அவர்களால் அன்று கூற முடிந்தது. தேவ ஞானம் பெற்ற இவர்கள், உலக ஞானத்தை புறக்கணித்து வாழ்ந்தவர்கள்! ஆகவேதான், எதிர்காலம் எவ்வளவு இருளாய் இருக்கப்போகிறது என்பதை அவர்கள் தெளிவாய் அறிந்திருந்தும், அந்த எதிர்காலத்தை மிகுந்த மகிழ்ச்சியோடும் நம்பிக்கையோடும் எதிர்கொண்டார்கள்!*

**இன்றும்கூட, ஒரு சில தேவ மனிதர்களும், பக்தியுள்ள ஸ்திரீகளும், இந்த புதிய ஆண்டில் என்ன சம்பவித்தாலும், அதை சந்திக்க கூடிய தைரியம் பெற்றிருக்கிறார்கள்! இவர்கள் சோர்ந்து போவதில்லை! ஆம், இவர்களே கிறிஸ்தவர்கள்!**

*இவர்கள், சம்பவிக்கபோகும் தீமைகளை காணமுடியாதவர்களாய், போலியான ஆறுதல் கூறுகிறவர்கள் அல்ல! அல்லது, சமாதானம் இல்லாத தேசங்களுக்கு நடுவே 'சமாதானம்! சமாதானம்!' என்ற போலியான எதிர்பார்ப்பு கொண்டவர்களும் அல்ல! மாறாக, உண்மையான எந்த நிலையையும் நேர்கொண்டு சந்திக்க தைரியம் பெற்ற சத்தியவான்கள்! மாயையான எந்த கண்ணோட்டத்தையும் ஏற்றுக்கொள்ளாமல், சந்திக்கப்போகும் சூழ்நிலைகள் நன்மையாயிருந்தாலும் அல்லது தீமையாயிருந்தாலும் அதை நேருக்கு நேர் எதிர்கொள்ளும் சத்தியவான்கள்! ஆகவே, சத்தியத்தை நெருங்கிச்*

செல்ல அச்சம் கொள்ளாமல், 'எங்கெல்லாம் சத்தியம் உண்டோ' அதை முகமுகமாய் கைகோர்த்து கிட்டிச் சேர்வார்கள்!

எந்த சந்ததியைக் காட்டிலும், கொடிதான இந்த இருளான நாட்களில், இந்த **உத்தம கிறிஸ்தவர்களே போர்முனையில் முன் நிற்பார்கள்!** உத்திரவாதமற்ற சமுத்திரத்தில், இன்றைய உலகம் மூழ்கிப்போய் விட்டது. ஒரு கிறிஸ்தவன் மாத்திரமே ஒளி வரும் பாதையின் வழியை அறிந்திருக்கிறான். உலகின் சுமுகமான நல்ல நாட்களில், இந்த கிறிஸ்தவம் வைத்திருந்த வேதத்தையும், கிறிஸ்தவ கீதங்களையும் இந்த உலகம் எள்ளி நகையாடியது! ஆனால் இப்போதோ, வேதமும், அதன் கீதமும் இணைந்து வாழும் 'அந்த உத்தம கிறிஸ்தவன்' இந்த உலகிற்கு இன்று தேவைப்படுகிறான்! அன்று அவர்கள் புறக்கணித்த வேதாகமம் இன்று அவர்களுக்குத் தேவைப்படுகிறது! ஏனெனில், இந்த வேதாகமத்தில் மாத்திரமே 'கொந்தளிக்கும் இன்றைய சமுத்திரத்தில்' நாம் எங்கு பயணம் செய்கின்றோம் என்ற "திசை காட்டும் கருவியை" பெற முடிகிறது!

ஆகவே, ஒரு கிறிஸ்தவன் இன்று வரை 'உலகத்தைப் பிரியப்படுத்தி' அதன் கவனத்தை திசை திருப்பலாம் என்று எண்ணி வாழ்ந்திருந்தால், அவன் மனந்திரும்பக்கடவன்! இனிமுதல், வேத சத்தியத்தை தைரியமாய் அறிவித்து அதன் திவ்விய வெளிப்பாடுகளை பிரகடனம் செய்திட தீர்மானிக்கக்கடவன்! "கர்த்தர் உரைப்பது என்னவென்றால்!" என்ற உறுதியான பிரகடனம் செய்கிறவனாய் மாறக்கடவன்! (யாத்.4:22).

**நாம் எதிர்கொள்ளும் இந்த ஆண்டு முழுவதும், மனுக்குலத்திற்கு என்ன சம்பவித்தாலும் அல்லது இந்த உலகம் எதைச் செய்தாலும், நாம் சிறிதும் அஞ்சிடத் தேவையில்லை! அது ஏனென்றால் "நாம் உண்மையான கிறிஸ்தவர்கள்!".**

உண்மை கிறிஸ்தவர்களாய் இருப்பவர்கள் யாவரும் "ஓர், உடன்படிக்கை இரத்தங்கொண்டு" என்றென்றும் பாதுகாக்கப் பட்டிருப்பார்கள்! இவர்களே 'கண்ணின் மணியைவிட' மேலாய், தேவனுக்குப் பிரியமானவர்கள்! எந்த இரவும், அவர்களின் வெளிச்சத்தை இருட்டாக்கிட முடியாது! எவ்வித கொடிய தீப்பிளம்பும் அவர்களை எரித்துவிட வலிமையற்றதாயிருக்கும்! அவர்களின் தீவிர பயணத்தில் 'காட்டாற்று வெள்ளமும்' அவர்களை மூழ்கடித்திட முடியாது!

**சீறும் காற்றும் அலையும் கூட அவர்களின் நண்பர்களாய் உடன் நிற்கும்! அவர்களின் இருளான இக்கட்டு நேரங்களில் "நட்சத்திரங்களும்"**

**அவர்களுக்கு துணை நிற்கும்! ஆம், கர்த்தர் அவர்களின் வலதுபாரிசத்தில் நிற்கிறபடியால், அவர்கள் ஒருக்காலும் அசைக்கப்படுவதில்லை!!**

*ஆகவே, நாளைய தினத்தை "துதியோடும், கீதத்தோடும்" எதிர்கொள்ளக்கடவோம். "இடைவிடாத ஆராதனை நிலையில்" தொடர்ச்சியாய் வாழ்ந்திடக்கடவோம்.* "**கடைசி காலத்திலே** *வெளிப்பட ஆயத்தமாயிருக்கும் இரட்சிப்புக்கு" தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கும் அவரது சொந்த ஜனமல்லவோ நாம்! (1பேதுரு1:5). நாம் நினைப்பதைவிட, அந்த "கடைசி காலம்" நமக்கு வெகு அருகாமையில் வந்து நிற்பதை அறிந்து, மகிழ்ச்சி குன்றாது வாழ்வோமாக!*

*- A.W.டோசர்*

---

## "சொந்த கிரியையை" ஒழித்தவன், இளைப்பாறுதல் காண்பான்!

*நம்பிக்கையற்ற 'சந்தேகமே' நம் இளைப்பாறுதலற்ற அங்கலாய்ப்பிற்கு காரணமாகும். மாறாக, "விசுவாசமே" நமக்கு பூரண இளைப்பாறுதலையும், சாந்தமுள்ள அமைதியையும் நம் உள்ளான ஆன்மாவிற்கு வழங்குகிறது. யாதொன்றைக்குறித்தும் பூரண நிச்சயம் எனக்குள் வந்துவிட்டால், இளைப்பாறுதலற்ற அங்கலாய்ப்பு என என் வாழ்வில் யாதொன்றும் இருக்காது! இவ்வாறாக விசுவாசிக்கிறவர்களே 'பதறாமல்' வாழ்வார்கள் என ஏசாயா 28:16-ல் கூறினார். இவ்வாறாக விசுவாசத்திற்குள்ளாய் 'ஓடிவந்து'* **அந்த இனிய ஸ்தலத்தை** *அடைந்தவர்கள் மாத்திரமே இளைப்பாறுதலுக்குள் 'பிரவேசிக்கிறார்கள்' என எபிரெயர் 4:3 ஆணித்தரமாய் கூறுகிறது.*

**வாரத்தில் 7- நாட்களும் நாம் இந்த இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்து வாழ வேண்டும். தேவனுடைய பரிபூரண சித்தத்தில் தங்கி இளைப்பாற வேண்டும்! நாள்தோறும், அவர் நடத்தும் வழி நடத்துதல் ஒவ்வொன்றிற்கும் இணங்கி இளைப்பாறுதல் காண வேண்டும்!**

*இதுவே புதிய உடன்படிக்கையின் "இளைப்பாறுதல் கண்டடையும்" ஓய்வுநாள் பிரமாணமாகும். இந்த இளைப்பாறுதலே நம் உள்ளான ஜீவியத்திற்கு தங்கு தடையற்ற தொடர்ச்சியான "ஓய்வு" அளிப்பதாய் இருக்கிறது.*

*ஆயினும், இந்த விசுவாசத்தை அடையும்படி நாடி ஓடி, பிரயாசப்பட்டு, போராடுகிறவர்களாய்.... நாம் இருக்க வேண்டும். இவ்வித நாடுதலுக்கும் 'விசுவாசமே' நமக்கு கைகொடுக்கிறது. ஆம், எதற்காக நாடி பிரயாசப்படுகிறோமோ "அந்த இளைப்பாறுதலுக்குள்"*

*நாம் நிச்சயம் பிரவேசித்து விடுவோம் என்பதே அந்த விசுவாசமாகும்! நம் ஜெப ஜீவியம் இதுபோன்ற போராட்டத்திற்குரியதாகவே இருக்க வேண்டும். முழங்காலில் நின்று ஜெபித்திடும் இந்த போராட்டத்தில் "இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்த" அடுத்த கணமே நமக்குள் மகிழ்ச்சியும் வந்து தங்கிவிடும். அந்த மகிழ்ச்சி, நம்முடைய ஜெபம் கேட்கப்பட்டது என்ற மகிழ்ச்சியும்! நாம் ஜெபித்த காரியம் நிச்சயமாய் நடைபெறும்! என்ற மகிழ்ச்சியுமாய் நம் இருதயத்தை நனைத்துவிடும்.*

**கெத்சமனேயில் 3-தடவை இயேசு போராடி ஜெபித்த பிறகுதான் "எதற்காக ஜெபித்தாரோ.... அதற்கான இளைப்பாறுதலை" கண்டடைந்தார்! அதன் பின்பு சீஷர்களை சந்தித்த அவர் "பூரண இளைப்பாறுதலில்" காணப்பட்டார்!**

*ஆனால் சீஷர்களுக்கோ இதற்கு நேர்மாறாக சம்பவித்தது! இயேசுவுக்கும் சீஷர்களுக்கும் இடையிலான வித்தியாசம் 'இது ஒன்றாகவே' எப்போதும் இருந்தது. இயேசு படகில் எப்போது ஏறினாலும், விசுவாசத்தோடும் பூரண இளைப்பாறுதலோடும் ஏறி பயணித்தார். ஆகவேதான் பெருங்காற்றோ, கொந்தளிக்கும் கடலோ அவரது பயணத்திற்கு சஞ்சலம் கொண்டுவர முடியவில்லை! இதற்கு மாறாக, சீஷர்களோ "இளைப்பாறுதலற்ற" அவிசுவாசமும் பயமும் கொண்டவர்களாய் இருந்தனர். புவிஈர்ப்பின் பிரமாணம் எவ்வளவு உண்மையோ அதுபோலவே விசுவாசிப்பவனின் இருதயத்தில் இளைப்பாறுதல் தங்குவதும் அத்தனை உண்மையானதாகும். இனியும், பயமும் பீதியும் ஆகிய யாதொரு அவிசுவாசமும் உங்கள் இளைப்பாறுதலை பறித்துக் கொள்ளாதிருக்க கவனம் கொள்வோமாக!*

*- எலியாஸ் அஸ்லாக்சன்*

---

## நானே முழு அர்ப்பணம் கொண்ட மனிதனாய் மாறுவேன்!

*ஆரம்ப ஊழிய காலத்தில், ஒரு இரவு ஜெபக்கூட்டத்திற்கு D.L.மூடி சென்றிருந்தார். அந்த கூட்டத்தில் ஹென்றி பர்லே என்ற ஓர் பக்தியான பிரசங்கி பேசினார். அவர் கூறிய ஓர் வாக்கியம் மூடியின் இருதயத்தை வெகுவாய் தொட்டது. அந்த வாக்கியம் என்னவென்றால் "தன்னை முழுவதும் அர்ப்பணம் செய்த ஒரு மனிதனுக்கு தேவன் எவ்வளவு பெரிய மகத்துவங்களைச் செய்வார்! என்ற அற்புதத்தைக் காண, இந்த உலகம் இன்னமும் காத்திருக்கிறது" என்ற பிரசங்கமே! இந்த அக்கினிமயமான வாக்கியமே, மூடி சகோதரனுக்கு ஓர் புதிய இலக்கை முன் வைத்தது!* **"யார் அந்த ஒரு மனிதன்?"** *என்ற கேள்வியை மூடி தனக்குள் கேட்டுப் பார்த்தார். அதற்குரிய விடையை துரிதமாய்*

*கண்டுபிடித்து, தன் புதிய இலக்கிற்கு ஆதாரமாய் மனதில் எழுதிவைத்து கொண்டார். அதுஎன்னவெனில் "அந்த ஒரு மனிதன் யாராயிருந்தாலும் இருக்கக்கூடும்! அந்த மனிதன், உயர் கல்வி கற்றவனோ அல்லது திறமை கொண்டவனோ என, அந்த ஊழியர் ஹென்றி அவர்கள் குறிப்பிட வில்லையே?* **'ஒரு மனிதன்'** *என்று தானே குறிப்பிட்டு இருந்தார்"....*

**ஆகவே, எனக்குள் வாசம் செய்யும் பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசையோடு 'நானே அந்த மனிதனாய் விளங்குவேன்!' என D.L மூடி உறுதி பூண்டார்.**

*இப்படியொரு தீர்மானத்தை எடுத்த சமயத்தில், லண்டனிலுள்ள* **'அருண்தல் ஸ்கொயர்'** *சபையிலிருந்து விசேஷ கூட்டங்களில் வந்து பேசும்படி அழைப்பு பெற்றார். அந்த ஞாயிறு காலை லண்டன் சபைக்கு வந்த மூடி, அங்குள்ள ஜனங்களை ஏறிட்டுப்பார்த்தார். அவர்கள் அனைவருமே 'ஏனோதானோவென்று' ஆவிக்குரிய எந்த ஆர்வமும் இல்லாதவர்களாய் இருந்தார்கள். புதிதாய் வந்த பிரசங்கியார் என்ன பேசுவார்? என்ற எதிர்பார்ப்பும் அவர்களிடம் துளிகூட காணப் படவில்லை! அன்று மாலை கூட்டத்தை ரத்து செய்து விடலாமா? என்று கூட எண்ணத் துவங்கிவிட்டார் D.L.மூடி! இதுபோன்ற ஜனங்களை உணர்வடையச் செய்திட எதைப் பிரசங்கிப்பது? எனவும் திகைத்தார்!*

*ஆனால், அந்த மாலை கூட்டத்தில் கர்த்தருடைய பிரசன்னமோ, வல்லமையாய் இறங்கி நிறைந்திருப்பதைக் கண்டார். D.L.மூடி அவர்கள் பிரசங்கிக்க துவங்கியவுடன், மிகப்பெரிய நிசப்தத்தோடு, ஜனங்கள் செய்தியை கவனமாய் கேட்டார்கள். கூட்டத்தார் அனைவரின் மீதும்* **ஓர் மின்சார சக்தி தாக்கியிருப்பதுபோல்** *D.L.மூடி உணர்ந்தார். கூட்டத்தின் முடிவில், இரண்டு குறிப்புகளைக் கூறி அழைப்பு கொடுத்தார்:* **1.***இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து, தங்கள் முழு ஜீவியமும் மாறும்படி, அவரை சொந்த இரட்சகராய் ஏற்றுக்கொள்ள எத்தனை பேர் விரும்புகிறீர்கள்?* **2**. *'நான் ஒரு மெய் கிறிஸ்தவனாய் மாற விரும்புகிறேன்' என, எத்தனைபேர் விரும்புகிறீர்கள்?*

*இந்த அழைப்பிற்கு இணங்கியவர்கள் தயவுசெய்து எழுந்து நில்லுங்கள்! நான் அவர்களுக்காக ஜெபிக்க விரும்புகிறேன் என கூறினார். அவ்வளவுதான், அந்த பெரிய அரங்கிலிருந்த அனைவருமே எழுந்து நின்றார்கள்! ஆச்சரியப்பட்ட மூடி, அவர்கள் "நான் கூறியதை சரியாக விளங்கிக் கொள்ளவில்லையோ?" என சந்தேகித்து, அவர்கள் அனைவரையுமே உட்காரும்படிச் சொன்னார். மீண்டுமாய் அந்த கூட்டத்தைப் பார்த்து "ஒரு மெய் கிறிஸ்தவனாய் வாழ விரும்புவது எளிதான விஷயமல்ல. நீங்கள் மனம் மாறுவதற்குரிய முகாந்திரத்தை*

நன்றாய் உணர்ந்து, இப்போதும் நீங்கள் மாற விரும்பினால், அருகிலுள்ள அடுத்த அரங்கிற்குச் சென்று அமரும்படி கேட்டுக்கொள்கிறேன்" என அழைத்தார். கிட்டதட்ட எல்லோருமே **மிகுந்த உணர்வுடன்,** அருகிலிருந்த அரங்கில் சென்று அமர்ந்தார்கள். நாற்காலி போதாத படியால், நிறைய நாற்காலிகள் அங்கு போடப்பட்டன. அருகிலிருந்த அரங்கம் ஜனங்களால் நிரம்பி வழிந்தது!

*அந்த திரள் கூட்டத்திற்கு "மனம் திரும்புகிறது என்றால் என்ன? இயேசு மீது வைத்திடும் விசுவாசத்தின் பலன் என்ன?" என்பதை விரிவாக விளக்கிப் பேசினார். இதை நன்றாய் உணர்ந்து தீர்மானித்தவர்கள் எத்தனை பேரோ அவர்கள் மாத்திரமே எழுந்திருங்கள் என அழைப்பு கொடுத்தார். மீண்டுமாய் அந்த அரங்கத்தில் அமர்ந்திருந்த அத்தனை பேருமே எழுந்து நின்றார்கள். இப்போது மூடி சகோதரன் மெய்யாகவே அதிர்ச்சியில் ஆழ்ந்தார்!*

கூட்டம் முடிந்தவுடன், அடுத்த நாள் மாலை, தங்களை ஒப்புக்கொடுத்த அனைவரும் இதே அரங்கில் *அருண்தல் ஸ்கொயர்* ஸ்தல சபை போதகரைச் சந்திக்கும்படி கூறி, பின்பு இங்கிலாந்தின் மற்றொரு பகுதிக்கு பயணமாய் சென்றுவிட்டார். அந்த செவ்வாய் கிழமை காலையில் "தயவு செய்து 'அருண்தல் ஸ்கொயர்' சபைக்கு உடனே திரும்ப வாருங்கள் " என்ற தந்தியைப் பெற்றார். அது ஏனென்றால், ஞாயிற்றுக் கிழமை, *மூடி* அவர்களின் கூட்டத்திற்கு வந்திருந்த ஜனங்களை விட, அதிகமான ஜனங்கள் திங்கட்கிழமை மாலையில் கூடிவிட்டார்கள்!

மீண்டுமாய் லண்டனுக்கு திரும்பிய *மூடி* சகோதரன் *அருண்தல் ஸ்கொயர்* சபையில் இரண்டு வாரங்கள் தங்கி, தொடர்ச்சியாய் பிரசங்கித்தார். சுமார் 53 வருடங்களுக்குப் பிறகு, மூடி அவர்களைச் சந்தித்த *ஜேம்ஸ் ஸ்பிரண்ட* என்ற பெயர் கொண்ட பாப்திஸ்து சபை போதகர், *மூடியை* சந்தித்து, "அன்று நீங்கள் லண்டன் சபையில் நடத்திய கூட்டத்தில் 400பேர் ஆழமாய் மனம் திரும்பி சபையில் அங்கமாய் மாறினார்கள்! அவர்களில் நானும் ஒருவன்! இப்போது நான் பாப்திஸ்து சபை போதகனாய் இருக்கிறேன்" என மிகுந்த நன்றியுடன் கூறினார்! இவ்வாறாக "முழுவதுமாய் அர்ப்பணம் செய்த ஒரு மனிதனுக்கு தேவன் என்ன செய்வார்?" என்ற கேள்விக்கு விடையை, தேவ ஊழியர் D.L.*மூடி* ருசிக்கத் தொடங்கினார்! **ஆம், அவரே அந்த ஒரு மனிதனாய் மாறினார்!** தேவன் செய்திட விரும்பும் மகத்துவத்தை கண்ணார கண்டு நிரூபித்தார்!

*- D.L.மூடி பிரசங்கியார்*

## ஜெபம், நமது புகலிடம்! நமது பேரானந்தம்!

ஜெப ஜீவியம் அந்தரங்கமானது! அதிலுள்ள இரகசியங்கள் ஜெபிக்கிறவனுக்கும் தேவனுக்கும் மாத்திரமே தெரியும். ஏனெனில், நமதாண்டவருடைய ஜீவியத்தில் மிகுதியான ஜெபங்கள் அந்தரங்கமானவை. சீஷர்கள் கூட அவைகளை அறிந்ததில்லை. அவர்கள் அவைகளை எழுதிவைக்கவுமில்லை. அவர் ஜெபம் செய்வதற்கென பல்வேறு இடங்களுக்கு தனித்துப்போவதுண்டு:

> *அவர் கூட்டத்தைவிட்டு விலகி வனாந்தரத்திற்கு சென்றோ, மலைமீது ஏறியோ தனித்து ஜெபிப்பது வழக்கம். பாலஸ்தீனா மலைகள் அடர்ந்த தேசம். ஒரு கிராமத்திலிருந்து இரண்டொரு மைல்தூரம் போனால் மலைகளில் ஏறலாம். ஊரைவிட்டு நீங்கி, சில வயல்களைக் கடந்ததும் மலைகளின் அடிவாரத்தைச் சேர்ந்து வெகு அமைதியாய் தனித்திருந்து ஜெபிக்கலாம். அவர் ஒரு கிராமத்தில் பிரவேசித்ததும் இவ்வாறு தனித்திருக்கக்கூடிய மலைகள் எப்பக்கம் இருக்கிறதென்றும், அதற்குப் போகக்கூடிய குறுக்குவழி எதுவென்றும் பார்த்துக்கொள்வார். பிரயாணிகள் ஒரு பட்டணத்துக்குப் போகும்போது அங்கே தங்க, சாப்பிடக் கூடிய வசதியான சத்திரம் உண்டாவென்றும், பார்க்கத்தகுந்த காட்சிகள் எவையென்றும் முந்தி விசாரிப்பார்கள். ஆண்டவர் எங்கே போனாலும் தமது பிதாவோடு தனித்திருப்பதற்கு ஏற்ற இடமுண்டோ? என்று பார்ப்பதே அவரது பிரதான தேடுதலாயிருந்தது.*

அவர் ஒரு வீட்டிலிருந்தாலும் அங்கே தனித்து ஜெபிக்க அறைகள் கிடையாது. எல்லாரும் ஒன்றாயிருந்து சம்பாஷிப்பதால், அங்கே அமைதல் இராது. அவர் வீட்டைவிட்டுத் தனித்துப்போன காரணம் இதுவே! பகலெல்லாம் வேலையிருக்குமானால், இரவை ஜெபத்தில் கழிப்பார் (லூக்கா **6:12**).

தனித்துப்போவது இருவிதத்தில் நமக்கு அனுகூலமாகும். **ஜன சந்தடியைவிட்டுப்** பிரிகிறோம். அதுமாத்திரமல்ல, **தேவ சமூகம்** நமது ஆத்துமாவுக்கு பிரத்தியட்சமாகிறது. தனித்துப்போராடின **யாக்கோபையும்,** வயல்வெளியில் தியானித்து வந்த **ஈசாக்கையும்** நினைத்துக்கொள்வோம்! நாம் வயல்களில், சோலைக்குள், தனித்து ஜெபிக்கும்போது, நமது ஆவி இயற்கையாகவே பரவசப்படுகிறது. கர்த்தரை முகமுகமாய் சந்திப்பதுபோலிருக்கிறது! அதனிமித்தம், **ஜெபம் மகா இன்பமாகிறது.** ஜெபம் முடிந்து, தேவாசீர்வாதத்தோடு

திரும்பி வருகிறோம். ஒரு மலையின்மேல் ஏறி, தனித்து ஜெபித்தால் இன்னும் அதிகமாய் நமது இருதயம் பரவசப்படும். அங்கிருந்து கீழே பார்த்தால் கிராமங்கள் தெரியலாம், ஆனால் சத்தம் ஒன்றும் கேளாது! மேலே ஆகாயத்தைப் பார்த்தால் **தேவன் நமது சமீபத்தில் இருப்பதுபோல்** தோன்றும். நமது வாயினின்று பிறக்கும் ஒவ்வொரு வார்த்தையும் உண்மையாயிருக்கும். நமது முழு இருதயத்தையும் தாராளமாய் கர்த்தரிடத்தில் ஊற்றலாம்! அவருடைய நிறைவான ஆசீர்வாதத்தை நிச்சயமாகவே பெற்றுக்கொள்ளலாம். ஆண்டவர் இயேசு, தனித்து ஜெபிக்கும்படி வனாந்தரத்தையும் மலைகளையும் விரும்பினதற்குக் காரணம் இதுவே!

**அவர் செய்த ஏராளமான வேலைகளையும், அதின் உத்தரவாதத்தையும், அவருக்கு இடையூறாக நேரிட்ட சோதனைகளையும் கவனிக்கும்போது, ஜெபம் அவருக்கு இன்றியமையாத அவசியமாயிருந்தது!**

ஏதேது காரியங்களுக்காக அவர் ஜெபித்திருப்பார் என்பதை கணக்கிட முடியாது. அவர் இடைவிடாது ஜெபித்தார். சில சமயங்களில் இரா முழுவதும் ஜெபித்தார். விசேஷித்த சமயங்களில் விசேஷித்து ஜெபித்தார்! அவர் பன்னிருவரைத் தமக்கு அப்போஸ்தலராகத் தெரிந்து கொண்டது மகா முக்கியமான சமயம்! ஏனெனில், அநேக சீஷர்கள் அவருக்குப் பின் சென்றார்கள். அவர்களில் பன்னிரண்டு பேர் மாத்திரம் அவருக்கு வேண்டும். கிறிஸ்து மார்க்கத்திற்கு அவர்கள் அஸ்திபார கற்களாயிருக்க வேண்டியவர்கள். அவர்களை அப்போஸ்தலராக ஏற்படுத்துவது அவருக்கும், அவர்களுக்கும், உலகத்துக்கும் மகா முக்கியமாக விஷயம்! இதற்காகவே இராமுழுவதும் ஒரு மலைமீதிருந்து ஜெபம்பண்ணிக் காலையில் இறங்கி வந்து அந்தப் பன்னிருவரையும் அப்போஸ்தலராகத் தெரிந்துகொண்டார். **யூதாஸ் ஏற்படுத்தப்பட்டதும் அந்த ஜெபத்தின் பலனே.** அவன் துரோகியாய் போனதால், ஆண்டவர் தப்பிதமாக அவனை தெரிந்து கொண்டதாக நினைக்கவில்லையே!

இதே பிரகாரமாய், அவர் வேறொரு சமயம் ஜெபம் பண்ணி முடித்த பிறகே, தமக்கு நேரிடும் பாடுகள் மரணத்தை சீஷர்களுக்குத் தெரியப்படுத்தினார். மகா முக்கியமான காரியங்களை அவர் செய்யத் தொடங்குமுன், அவர் வெகுநேரம் ஜெபிப்பது வழக்கம்.

**சங்கடமான காரியங்கள் நமக்கு நேரிட்டு, என்ன செய்வதென்று தெரியாமல் நாம் திகைக்கும்போது ஜெபமே நமது புகலிடம்!**

காரியங்களை விவரமாய் கர்த்தருக்குச் சொல்லாமல், நாமே அவைகளை நினைத்து வருந்துவதினால், கவலையும் அந்தகாரமும் நமது ஆத்துமாவைச் சூழ்ந்துகொள்ளும்! மலைபோன்ற விஷயங்கள்

தேவ பாதத்தில் வைக்கப்படும்போது 'பனிபோல்' அகன்றிடும். நாம் செய்ய வேண்டியது இன்னதென்று கர்த்தரே நமக்குப் போதிப்பார்.

'வேலைகள் எவ்வளவுக்கு அதிகரித்ததோ' அவ்வளவுக்கு அதிகமாய் அவர் ஜெபித்தார். ஜனங்கள் இடைவிடாமல் அவரை நெருக்கினார்கள். அவர்களுக்கு வசனத்தைப் போதித்தார். நோயாளிகள் திரளானபேர் வந்தார்கள். அவர்கள் அனைவரையும் குணமாக்கினார். ஜனங்கள் இவ்வாறு வருவதும் போவதுமாயிருந்தபடியால், அவர் சாப்பிடவும் நேரமில்லாதிருந்தது. அப்படியிருந்தும் அவர் **ஜெபிப்பதை நிறுத்தவில்லை.** ஜெபத்திற்கு ஈடாக ஊழியம் என அவர் ஒருபோதும் நினைக்கவில்லை. வேலை எவ்வளவுக்குச் செய்தாரோ அவ்வளவுக்கு ஜெபித்தார். "அவருடைய கீர்த்தி அதிகமாகப் பரம்பிற்று, திரளான ஜனங்கள் அவருடைய உபதேசத்தைக் கேட்பதற்கும், அவராலே தங்கள் பிணிகள் நீங்கிச் சௌக்கியமடைவதற்கும் கூடிவந்தார்கள். **அவரோ** வனாந்தரத்தில் தனித்துப்போய் ஜெபம்பண்ணிக் கொண்டிருந்தார்" (லூக்கா 5:15,16). இதுபோலவே அவர் தம்மிடத்தில் வந்த ஜனங்களுக்கு வெகு நேரம் உபதேசித்து, அவர்களை அற்புதமாகப் போஷித்தபின், தனித்து ஜெபம் பண்ண ஒரு மலையின் மேல் ஏறினார். **அவர் வேலைக்கு முன்னும் ஜெபித்தார், வேலைக்குப் பின்னும் ஜெபித்தார்.**

வேலையின் உத்தரவாதத்தை நாம் உணரும்போது, வேலைக்கு முன் ஜெபிக்கிறோம். ஆனால், வேலை முடிந்தபின் ஜெபிக்கும் வழக்கம் நமக்குண்டோ? வேலை அதிகம், ஆகையால் ஜெபிக்க நேரமில்லையென நாம் சொல்லலாம். நாம் 'ஜெபிக்க நேரமில்லை' என நாம் கூறும் காரணத்திற்காகவே ஆண்டவரே ஜெபிப்பதற்கு முன் உதாரணமானார். எனக்கு அதிகமான வேலை இருந்தால்.... நான் அதிகமாய் ஜெபிக்க வேண்டும்! நாம் பிரசங்கித்தபின் அல்லது ஒரு முக்கியமான வேலையை முடித்தபின், செய்த வேலையின் சிறப்பைப்பற்றியே பேசுகிறோம். எல்லாம் நன்றாய் நடந்ததென்று நாம் பேசிக்கொள்வதே நமக்கு ஆறுதல்! ஆண்டவரோ, மகத்துவமான காரியங்களைச் செய்தபின்பு தேவசமுகத்தில் தங்கியிருப்பதையே அதிகமாய் நாடினார். வேலைக்கு முன் ஜெபம் எவ்வளவு அவசியமோ, வேலைக்குப்பின்னும் ஜெபம் அவ்வளவு அவசியம் என்பதை இயேசு தமக்குள் உணர்ந்திருந்தார்.

**இயேசு தாம்செய்த ஊழியத்தின் வழியாய் செலவான வல்லமையை, ஜெபத்தின் மூலமாய் திரும்ப நிரப்பினார். சாத்தான் சோதித்து மேற்கொள்ள இடமுண்டாகாதபடி, இவ்வாறு முன்னும் பின்னும் பிதாவைச் சார்ந்திருந்தார்!**

நமது வேலைகள் ஜெபத்தில் ஆரம்பிக்கப்பட வேண்டியது போல, செய்யப்பட்ட வேலைகள் ஜெபத்தால் முடிக்கப்பட வேண்டியதும் அவசியமே! அப்போதுதான் நமது ஊழியம், மலைமேல் ஏறும் ரெயில் வண்டியை, முன் என்ஜின் இழுக்க, பின் என்ஜின் தள்ளுவதுபோல இருக்கும். **ஜெபமில்லா ஊழியம் பாழாவது போல ஜெபம் தொடராத ஊழியமும் விருதாவகும்:**

*நாம் செய்த ஊழியம் பலிக்கும்படி ஜெபம் அவசியம்! "இன்னும் செய்ய வேண்டிய" வேலைக்குப் பெலன் கிடைக்கும்படி ஜெபம் அவசியம்! 'செய்த வேலையில் திருப்தியடைந்துவிடாதபடி' ஜெபம் அவசியம்! வேலையை நன்றாய் நடத்தினோம் என்கிற பெருமை வராதபடி ஜெபம் அவசியம்! பிரசங்கத்திற்கோ அல்லது வேறொரு வேலைக்கோ முன்பு, நம்மில் காணப்படும் பயபக்தியும் தாழ்மையும் அவ்வேலை முடிந்த பின்பும் நம்மில் காணப்பட ஜெபம் அவசியம்!*

தேவன் கிருபையாய் நம்மை வல்லமையோடு உபயோகித்தார் என்பதை மறந்து, நாமே பெரிய காரியங்களைச் செய்து விட்டதாகவும், அரிதான விஷயங்களைப் பேசினதாகவும் எண்ணி தற்பெருமைக்கு இடங்கொடுக்கிறோம்! அச்சமயத்தில் சோதனைக்காரன் தன் தூதர்களை அனுப்பி, "**பெருமைக்கு பிரிய சிநேகிதர்களான இவர்கள்**" நாம் செய்த வேலையைப் புகழ்ந்து பேசும்போது, இன்னும் அது நமக்கு மோசமாகும்! பெருமையைப்போல் தேவனை நம்மை விட்டுப் பிரிக்கக் கூடியதெது? தூதர்கள் தள்ளப்பட்டது எதினாலே? யாருக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார்? ஊழியத்தால் வரக்கூடிய பெருமையைக் குறித்து நாம் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்! அதற்கு கைகண்ட மருந்து ஜெபமே! **பிதாவின் சமூகத்தில் எப்பேர்ப்பட்ட பெருமையும் அழிந்துபோகும்!** பெருமையாகிய அக்கினியை அவிக்கக்கூடிய வெள்ளம் ஜெபமே! ஓ கிறிஸ்துவனே, ஜெபம் உன் வாழ்வில் போற்றுதற்குரியதாய் மாறுவதாக!

*- பரமானந்தம் ஐயர்*

---

## சுயத்திற்கு மரிப்பது பேரின்பம்!

என் ஆத்துமா, ஒரு மாறாத சத்தியத்தை இப்போது அறிந்து கொண்டது. அது என்னவெனில், இவ்வுலகின் எவ்வித மேன்மையாய் இருந்தாலும், அதன் பின்னணியில் '**சுயம்**' இருக்குமேயானால், அது ஒன்றுக்கும் உதவாது என்பதுதான்! ஒரு நபரிடம் இருக்கும் சுயம், மகிழ்ச்சி நிறைந்த தரிசனத்தை பார்த்திருக்கச் செய்யும்! உங்கள் சுயம், வானம் திறந்ததைப் போன்ற பரவசத்தை அனுபவித்திட வைக்கவும்

*கூடும்! இவ்வாறு, மகிழ்ச்சி அனுபவங்களை மாத்திரமே உங்கள் ஜீவியத்திற்கு ஆதாரமாய் கொண்ட நீங்கள், ஒரு காலகட்டத்தில் 'பெரும் ஏமாற்றத்தையே' சந்திப்பீர்கள்! அது ஏனென்றால், நீங்கள் எண்ணி மகிழ்ந்து கொண்டிருக்கும் மிகப்பெரிய பரவசங்களுக்கு, ஒரே ஆதாரமாய் இருப்பது 'உங்களின் சுயமே!' இந்நாள்வரை உங்களை ஆதரித்த சுயம் ஒரு நாளில் உங்களை நிச்சயமாய் கைவிடும்! அப்போது நீங்கள் அடைந்திடும் வேதனை சொல்லி முடியாததாயிருக்கும்!!*

**ஆகவேதான், "சுயத்தை இழக்கும் நஷ்டத்தை" நீங்கள் மகிழ்ச்சியுடன் செய்யாவிட்டால், உன்னதத்தின் நித்திய பேரின்பத்தை ருசித்திட ஒருக்காலும் உங்களால் முடியாது!**

*பல்வேறு அனுபவங்களைக் கடந்து வந்த ஓர் தலைசிறந்த பரிசுத்தவான் கூறியதைக் கேளுங்கள் : "இந்த பூமியில் நான் எதையும் 'சுய - அன்பை' முன் வைத்துப் பெறுவதற்கு மறுத்திருந்தால்.... எனக்குத் தேவையான ஒவ்வொன்றும் 'நான் அதைத் தேடிப் போகாமலே' அது எனக்கு, தேவனால் வழங்கப்படுவதைக் காண்கிறேன்!" என்று கூறினார். ஆகவே என்ன சொல்வோம்?* **மரித்திடும் ஓர் கோதுமை மணியைப்போல் 'மேலான மகிழ்ச்சி' வேறு எதுவுமே இல்லை எனலாம்.** *அது எப்படியென்று நீங்கள் கேட்கிறீர்களா? நம் ஆண்டவரே அதற்கு விடை கூறினார். ஆம், மரிக்கும் அந்த கோதுமை மணி "நூறு பங்கு பலனைத் தரும்" என அவர் குறிப்பிட்டது அற்பமான மண்ணுக்குரியது மாத்திரமல்ல, அளவிட முடியாத நித்திய பேரின்பமும் நம்முடைய சொந்த பலனாய் மாறிட முடியும். இப்படியொரு ஆனந்த நிலையில், நம்முடைய ஆத்துமா, தனக்கென எதையும் செய்ய நாடாமல் மிகுந்த அமைதியுடன் இருப்பதை நாம் உணர முடியும். உண்மைதான், தேவனிடமிருந்து நன்மையாயிருந்தாலும் அல்லது தீமையாயிருந்தாலும் அதை அப்படியே ஏற்றுக்கொள்ளும் இளைப்பாறுதலை நம்முடைய ஆத்துமா பெற்றுவிடுகிறது. இது ஆச்சரியமான ஜீவியமல்லவா!*

**எவ்வித சுயநல - உணர்ச்சியும் நம்மை பாதிக்காமலே நன்மையை தேவனிடமிருந்து பெற்றுக்கொள்வதைப்போலவே, தீமையையும் பெற்றுக் கொள்ளும் ஆச்சரியம்! தீமையின் பிரவாகம் நமக்குள் வந்தாலும், அதுவாகவே மறைந்து விடுகிறது! அவைகள், நம்மை வந்து மோதியதைப் போல் இருந்தாலும், நம்மை தொடாமலே சென்றதைப் போன்ற ஆச்சரியம்!**

*'டோனான்' ஊரில் என்னுடைய ஊழிய பங்கு நிறைவேறியவுடன், ஜெனிவா திரும்பினேன். அங்கு நான் பயணிப்பதற்கு யாதொரு ஏதுகரமும் இல்லை. அப்போது பிரான்ஸ் தேசத்து நண்பர் ஒருவர் தன்னுடைய குதிரையை எனக்கு கொடுத்து உதவினார். நானாக*

*குதிரை ஓட்டுவது எனக்கு கஷ்டமாயிருந்தது. ஆனால், அந்த பிரான்ஸ் நண்பரோ, "இது சாதுவான குதிரை தான், தைரியமாக போகலாம்" என்று கூறினார். அந்த குதிரையின் மேல் பயணத்திற்கு ஏறி அமர்ந்தவுடன் அருகிலிருந்த ஒரு பட்டறை தொழிலாளி, எனக்கு உதவுவதாக எண்ணி, குதிரையின் பின்னங்காலை ஒரு வாரினால் ஓங்கி அடித்தார்! அவ்வளவுதான், அது தன் பின்னங்காலால் உதைத்து என்னை கீழே தள்ளி விட்டது. நான் முகங்குப்புற விழுந்தேன். என்னுடைய இரண்டு பல்லும், தாடை எலும்பும் உடைந்து சேதமடைந்தது.*

**நடந்த அற்புதம் என்னவென்றால், என் தலை அடித்து மூளை சிதறி போகாமல் வலிமையான ஒரு கரம் என் தலையை தாங்கிக் கொண்டதை உணர்ந்தேன்!**

*இப்படியொரு சூழ்நிலையில், சிறிதும் பாதிக்கப்படாதவளைப் போல, அதே குதிரையில் அமர்ந்து, நான் செல்ல வேண்டிய இடத்திற்கு ஓட்டிச் சென்றேன்! அது ஒரு நீண்ட பயணமாய் இருந்தது!*

*நான் பாரீஸ் பட்டணத்திற்கு பத்திரமாய் குதிரையை ஓட்டிச் சென்றடைந்ததும், என்னைச் சூழ நின்ற நண்பர்களும் உறவினர்களும், எனக்கு சம்பவித்த அற்புதமாக நிகழ்வுகளைக் கேட்டு, கர்த்தரை வெகுவாய் மகிமைப்படுத்தினார்கள்! என்னுடைய காலத்திலிருந்த வயோதிப பரிசுத்தவாட்டி சகோதரி, கடிதத்தில் என்னோடு தொடர்பு கொண்டு, எனக்கு நிகழ்ந்த கர்த்தருடைய செய்கைகளைக் கேட்டறிந்து மகிழ்ச்சி அடைந்தார்கள். அங்கு நான் சென்ற ஒரு கூட்டத்தில், பரிசுத்தத்தைக் குறித்து கேள்விகேட்ட ஒரு வாலிப பெண், "தன் சந்தேகங்களுக் கெல்லாம் பதில் கிடைத்தற்காக" நன்றி தெரிவித்து, சிறந்த விலையுயர்ந்த வெகுமதிகளை அனுப்பி வைத்தார்கள். அதுமாத்திரமல்லாமல் 'பண தேவை' எப்போது ஏற்பட்டாலும் எனக்கு தயவாய் தெரிவியுங்கள் என்றும் கடிதம் எழுதினார்கள். எங்கெல்லாம் நான் பொல்லாத குற்றச்சாட்டுகளை சந்திக்க நேர்ந்ததோ, அங்கெல்லாம் 'என் நியாயத்தை உயர்த்தி' பேசத் தொடங்கினார்கள். இவைகளையெல்லாம் எழுதி நான் சொல்வதற்கு காரணம் "உயர்வோ, தாழ்வோ, வீண் பழியோ, நியாயமோ, கொடிய விபத்தோ, அல்லது பெற்ற சுகமோ" ஆகிய யாதொன்று நேரிட்டாலும், அவைகள் என் ஆத்துமாவை சலனப்படுத்த முடியவில்லை! இந்த நிலையை எண்ணி, என் உள்ளம் தேவன்பால் நன்றியினால் நிறைந்தது!*

*- மேடம் குயான்*

## எது, என் சிலுவை?

சிலுவை என்பது "வெளியில் உள்ள" யாதொன்றின் மீதும் அல்ல! தன் மனைவியையோ, தன் கணவனையோ, தன் பிள்ளைகளையோ அல்லது யாரையுமோ "**இவர்கள் என் சிலுவை**" **என கூறிடக் கூடாது. அது, எனக்குள் நடைபெறும் மாபெரும் மறுரூப செயலேயாகும்!** நித்தியத்திற்குரிய "கோபுர வாழ்விற்கே" அதாவது, உயர்ந்த உன்னத வாழ்விற்கே என் சிலுவை என்னை நடத்திச் சென்றிட வேண்டும்! நான் இப்போது முரண்பாடு கொண்டு, எதிர்த்துப் போராடுவதெல்லாம், என் மாம்சம் அதன் ஆசை இச்சைகள்; என் சுய ஜீவனான: சுய கௌரவம், சுய அன்பு, சுய மரியாதை, சுய உரிமைகள், சுய ஆணவம்; இந்த உலக இராஜ்ஜியத்திற்குரிய பணம், பட்டம், பதவி.... ஆகிய இவைகளுக்கு மாத்திரமே நான் முரண்பாடு கொண்டு, அவைகளை வெறுத்து, **என் சிலுவையில் அறைந்து,** இயேசுவைப் பின்பற்றி, அவரது ஜீவனுக்குள் (பரம சற்குணத்தில்) பங்கு பெறுகிறேன்!

**சோதனை வேளையில் வெளிப்படும் "சுயத்தையே" சிலுவை எடுத்து அறைந்திட வேண்டும். அதாவது 'அன்றன்று' வெளிப்படும் நம் சுயம் சிலுவையில் அறையப்பட்டு மரிக்க வேண்டும்! (லூக்.9:23). நம் பாவ இச்சைகள், சுயம், உலகம், ஆகியவற்றிற்கு விரோதமாகவே நாம் இரத்தம் சிந்தி போராட வேண்டும்! (எபி.12:4). நம் சுயத்திற்கு இரக்கம் செய்து விடவே கூடாது!**

சுய கௌரவம், சுய பட்சாதாபம், கொதிக்கும் கோபம், தகித்திடச் செய்யும் பாலிய இச்சைகள்.... ஆகிய யாதொன்றிற்கும் இரக்கம் செய்யாமல், "இத்தனை காலம் உனக்கு இன்பம் தந்தோமல்லவோ" போன்ற அதன் கெஞ்சுதலுக்கு பலியாகாமல், அவைகளை "சிலுவையில் அறைந்து, இரத்தம் சிந்தி, மரித்து "ஜீவனுக்குள் பிரவேசித்திட வேண்டும்! இவ்வாறு "**என் சிலுவையை**" இயேசுவைப்போல் மரணபரியந்தம் கீழ்ப்படிந்து, நம் குருவைப் பின்பற்றி நடந்திட நம் யாவருக்கும் தேவன் கிருபை செய்வாராக! (பிலி.2:8). இந்த சிலுவை வழியில் அனுதினமும் இயேசுவைப் பின்பற்றினால் மாத்திரமே, அவரைப்போல் 'மகிமையில்' முடிசூட்டப்படுவோம்! (எபி.2:9). வெளியில் "முரண்பாடு" கொண்டு, அதை சிலுவை என்று எண்ணியவர்கள், தங்கள் சூழ்நிலைகளில் 'ஒடுங்கிப் போவார்கள்!' புறக்கணிக்கப்படும் வேளையில் 'மனமுறிவு அடைவார்கள்!' (2கொரி.4:8,9). இதுவல்ல, "என் சிலுவை!"

என் சிலுவையோ, அடுத்த வசனங்களில் குறிப்பிடப்பட்ட என்னை "இயேசுவின் மரணத்திற்குள்" நடத்தி "இயேசுவின் ஜீவனை" எனக்குள் மலரச் செய்துவிடும்! ஆமென்.

- T.ரத்தினகுமார்

## நற்குணமான தாழ்மை ஊழியர்
# பில்லிகிரஹாம்!



தன் 100-வது வயதில் மரித்த 'மா தேவ மனிதர்' என எல்லோராலும் அறியப்பட்ட பில்லிகிரஹாம் அவர்கள், ஒரு விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர். பட்டதாரி இளைஞர் கூடுகையொன்றில், உரையாற்றிய போது நகைச்சுவையாய் அவர் சொன்னது: "மின்சாரம் துண்டிக்கப்படுமானால், தம்பி தங்கையரே, உங்களால் ஒன்றும் செய்ய முடியாது போய்விடும். எனக்கோ மீன் பிடிக்கத் தெரியும், வயல் வேலை செய்யத் தெரியும், பால் கறக்கத் தெரியும்" இப்படி எதையாவது செய்து கொண்டிருப்பேன்! என்றார். உலகெங்கும் அவரது பெருங்கூட்டங்களில் அவர் பிரசங்கித்து முடித்து அழைப்பு கொடுக்கும் போது பாடப்பட்ட பாடல் "நான் பாவிதான், ஆனாலும் நீர்" (Just as I am) என்ற தாழ்மையான நொறுங்குண்ட பாடல்தான்!

பில்லிகிரஹாம் அடிக்கடி பிரசங்கபீடத்தில் பயன்படுத்திய சொற்றொடர், "பைபிள் சொல்லுவதாவது...." (The Bible Says....) என்பதாகும். தோல் கட்டுமான வேதாகமத்தைப் பெருமிதமாக உயர்த்திக் கொண்டு எத்தனை முறை வேண்டுமானாலும் சளைக்காமல் இச்சொற்றொடரை முழங்குவார்! கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கலப்படமற்றுப் பிரசங்கித்தார். அதிலிருந்து அவர் வழிவிலகவேயில்லை.பில்லிகிரஹாமுக்கு அதிபர் பராக் ஒபாமா செலுத்தியுள்ள அஞ்சலியில்: "தலைமுறை தலைமுறையான அமெரிக்கர்களுக்கு நம்பிக்கையும் ஆலோசனையும் தந்த **ஒரு தாழ்மையுள்ள ஊழியன்!**" என கூறினார். அமெரிக்க அதிபர்களில் பலர் பில்லிகிரஹாம் நெருக்கமாயிருந்தும் அவர்களிடமிருந்து ஒருபோதும் தயவோ, உபகாரமோ அவர் நாடவில்லை!

உலகிலேயே மிக அதிக அளவில் மக்களைக் கூட்டக்கூடியவராய் இருந்தாலும், பில்லிகிரஹாம் ஒருபோதும் தன்னை உலகிலுள்ள மற்ற ஊழியரைவிடப் பெரியவரென்று நினைக்கவேயில்லை. பில்லிகிரஹாம் தனது உடன் சுவிசேஷகர்கள் மீது காட்டியுள்ள அன்பும் அவர்களைப் பாராட்டியுள்ளதும் கிறிஸ்தவ ஊழியரிடையே காணப்பட வேண்டிய தாழ்மையின் சிறந்த எடுத்துக் காட்டு! பில்லிகிரஹாமின் பிரசங்கங்கள் எளிமையாயிருந்தாலும், வல்லமையும் அதிகாரமும் நிறைந்ததாயிருக்கும்! தன்னைப் பற்றி பவுல் கூறிய அறிக்கையே பில்லிகிரஹாமிற்குப் பொருந்தும்: "என் பேச்சும் என் பிரசங்கமும் மனித ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும் வல்லமையினாலும் உறுதிப்படுத்தப்பட்டதாயிருந்தன" (1கொரி.2:5). பில்லி கிரஹாம் பேசும்போது, கூட்டத்தினர்மீது ஆவியானவரின் அசைவாடுதல் தெளிவாய் காணும்படி இருக்கும்! அதை யாராலும் மறுக்க முடியாது! **"பரிசுத்தஆவி அபிஷேகத்தின்" அவசியத்தை இரட்சிக்கப்பட்ட கிறிஸ்தவர்களுக்கு அவர் எப்பொழுதும் வலியுறுத்தி பேசுவார்! (எபே.5:18).**

"உலகமே எனது திருச்சபை மக்கள்!" என கூறிய ஜான்வெஸ்லியின் கூற்று பில்லிகிரஹாமின் வாழ்க்கையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. விவசாயப் பின்னணியிலிருந்து வந்திருந்த பில்லி கிரஹாமிற்கு "உலகமே விளைநிலம்" என்றாயிற்று (மத்.13:38). Decision என்ற அவரின் மாதப் பத்திரிக்கை, இப்பொழுதும் தனது 58ம் ஆண்டில், உலகிலுள்ள கிறிஸ்தவ பத்திரிக்கைகளின் நடுவில் முதன்மையாய் நிற்கிறது. மனதிடமும், நற்குணமும், ஆவியானவர் அருளும் தாழ்மையும் நிறைந்த சுவிசேஷகர்கள், போதகர்கள் நம் நாட்டிற்கு எவ்வளவாய் தேவை! அப்பொழுதுதான் 21-ம் நூற்றாண்டு இந்தியர்களை ஜீவனுள்ள தேவனிடம் திருப்ப முடியும்!

*- நிரூபித்து வாழ்ந்த கிறிஸ்துவின் தாசர்கள்*

## "தெய்வ பயமே" இன்றைய தேவை!

ஒரு முகமதிய தளகர்த்தர், ஒரு சமயம் அரபி தேசத்து பாலைவனத்தின் வழியாக சென்று கொண்டிருந்தபோது, ஒரு வாலிபன் ஒரு பெரிய ஆட்டு மந்தையின் 300 ஆடுகளை மேய்த்துக்கொண்டிருப்பதைக் கவனித்தார். அவர் அந்த வாலிபனண்டை சென்று "தம்பி, உனது ஆடுகளில் ஒன்று எனக்கு வேண்டும். நான் அதற்கான விலைக்கிரயத்தை உனக்கு தந்திடுவேன்" என்று கூறினார். அதற்கு அந்த வாலிபன் "ஐயா, நான் இந்த ஆடுகளுக்கு சொந்தக்காரன் அல்லன். நான் கூலிக்காக ஆடுகளை மேய்ப்பவன். எனது எஜமானரின் அனுமதியின்றி, இந்த ஆடுகளில் எதனையும் நான் தர இயலாது" என்று பணிவோடும் சாந்தத்தோடும் கூறினான்.

அந்த ஆட்டிடையனின் உண்மையைச் சோதிப்பதற்காக அந்த தளகர்த்தர் "தம்பி, உனது எஜமானர் இங்கே இந்த வனாந்தரத்தில் இப்பொழுது இல்லை. அவர் எங்கேயோ கண் காணாத தொலை தூரத்தில் இருக்கின்றார். நீ எனக்கு ஒரு கொழுமையான ஆட்டை அதற்கான விலைக்கிரயத்துக்கு தா. உனது எஜமானர் அந்த ஆட்டைக் குறித்துக் கேட்டால், அதை ஒரு ஓநாய் வந்து பட்சித்துப்போட்டது என்று ஒரு பொய்யைச் சொல்லி விடு" என்று சொன்னார். இந்த வார்த்தைகளைக் கேட்டதும் அந்த ஆட்டிடையன் சற்று நேரம் மௌனம் ஆனான்!

சற்று நேர அமைதிக்குப் பின்னர், அவன் தனது வாயைத் திறந்து "நல்லது ஐயா, உங்கள் வார்த்தைகளின்படி நான் எனது எஜமானரை எளிதாக ஏமாற்றிவிடலாம். ஆனால், நான் வழிபடும் எனது அல்லாவை (இறைவனை) நீங்கள் சொன்ன வார்த்தைகளால் ஏமாற்ற முடியாதே. அவருடைய கண்கள் என்னைப் பார்த்துக் கொண்டிருக்கின்றனவே!" என்று சொன்னான். அந்த உண்மையுள்ள ஆட்டிடையனின் வார்த்தைகளை கேட்டு மனமகிழ்ந்த அந்த தளபதி அவனுக்கு தக்க சன்மானம் கொடுத்துவிட்டுச் சென்றான்.

அன்பான வாலிபர்களே, என்னுடைய அந்தரங்கத்தின் ஒவ்வொரு செய்கைகளையும், தேவன் பார்த்துக் கொண்டிருக்கிறார்! என்பதே "தெய்வ பயத்தின்" உணர்வாகும். இந்த ஆண்டு முழுவதும் கர்த்தருக்கு பயந்து ஜீவித்திட உங்கள் யாவருக்கும் தேவன் கிருபை செய்வாராக!

- சுவிசேஷ மலர்

பரலோக பொக்கிஷங்கள்

Published and Owned by:
MADURAI CHRISTIAN FELLOWSHIP, a Regd Society,
*Editor* T.Rathnakumar, Madurai.
Printed by SFA Print (P) Ltd., Sivakasi.